**NST Campus**

# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2026

| தரம் 07 | சைவநெறி | 1.30 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டிலக்கம் : ......................  புள்ளிகள்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

## 01. சரியான விடையின் கீழ் கோடிடுக

1. திருச்சிராப்பள்ளி குன்றுடையானுக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர் யாது?
   01. நடராஜா  02. தாயுமானவர் சுவாமி
   03. தட்சிணாமூர்த்தி  04. லிங்கோற்பவர்

2. தேவார திருவேடுகள் கிடைக்கப்பெற்ற இடம்
   01. தில்லைச்சிற்றம்பலம்  02. திருவாரூர்
   03. திருவண்ணாமலை  04. திருச்செந்தூர்

3. இறைவனிடம் மாங்கனி பெற்று தன் கணவனுக்கு கொடுத்தவர்
   01. மங்கையற்கரசி  02. திலகவதியார்
   03. புனிதவதி  04. ஆண்டாள்

4. தாச மார்க்கத்தை கடைப்பிடித்தவர்
   01. மாணிக்கவாசகர்  02. சுந்தரர்
   03. அப்பர்  04. சம்பந்தர்

5. அடங்கன் முறைக்குள் அடங்கும் திருமுறைகளை பாடியோர் தொகை
   01. 3  02. 5  03. 4  04. 10

6. நட்சத்திரங்களின் எண்ணிக்கை
   01. 12  02. 27  03. 29  04. 9

7. பறாளை ஈஸ்வர ஆலயத்தின் தல விருட்சம்
   01. மருதமரம்  02. வில்வம்  03. ஆலமரம்  04. புன்னை மரம்

8. முதன் முதலாக கிழக்கிலங்கையில் உருவாக்கப்பட்ட சித்திர தேர் உள்ள ஆலயம் எது
   01. மாமாங்கேஸ்வரர்  02. திருகோணமலை பத்திரகாளியம்மன்
   03. திருக்கோனேஸ்வரம்  04. கோக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரம்

9. சேர்.பொன் இராமநாதன் பிரபுப் பட்டம் பெற்ற ஆண்டு
   01. 1921  02. 1923  03. 1911  04. 1879

10. திருத்தொண்டர் புராணம் என அழைக்கப்படுவது
   01. சிவபுராணம்  02. பேரிய புராணம்  03. கந்தபுராணம்  04. திருப்புகழ்

(10 X 2 = 20)

## 02. சரியாயின் (√) எனவும், பிழையாயின் (x) எனவும் அடையாளம் இடுக

1. புதுமனை புகுதலின் போது சுபமுகூர்த்தம் பார்க்க வேண்டும் (   )
2. கொலு வைத்தலும் தொடர்புடைய விரதம் சிவ விரதமாகும் (   )
3. திருவாசகம் 10ம் திருமுறையாகும் (   )
4. கந்த புராணத்தை பாடியவர் கச்சியப்பர் சிவாச்சாரியார் (   )

5. பஞ்சமா பாதகங்கள் செய்வதனால் நன்மை ஏற்படும் (  )

(5 X 2 = 10)

## 03. பொருத்தமான சொற்களை தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்புக

| சடங்குகள், | தெய்வத்தன்மை, | பாடசாலை, | திருப்புகழ், | தோழன் |
|---|---|---|---|---|

1. திருமுறைகள்.................................. பொருந்திய அருட்பாடல்களாகும்.
2. மாணவர்களுக்கு கல்வி, ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுப்பது................................ ஆகும்
3. ஆகமம் சார்ந்த வழிபாட்டில்....................................முக்கியம் பெறுகின்றன
4. சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனை.............................. ஆகக் கொண்டு யோக நெறியில் நின்றார்
5. ''இறவாமல் பிறவாமல்'' என்ற............................ கதிர்காம கந்தன் மீது புகழ்ந்து பாடப்பட்டது

(5 X 2 = 10)

### பகுதி - II

## முதலாம் வினா உட்பட 05 வினாக்களுக்கு விடை தருக

01. 1. பின்வரும் திருமுறைப் பாடல்களில் இரண்டினைப் பிழையின்றி வரிசைக்கிரமமாக எழுதுக
    2. அவற்றைப் பாடியவர் பெயர், பன் என்பவற்றை குறிப்பிடுக

    அ) நிறைகழ லரவம்
    ஆ) மாதர் பிறைக் கன்னி
    இ) நத்தார் படை
    ஈ) விருது குன்றமா

(6 X 2 = 12)

02. மனித வாழ்விற்கு உயர்வான எண்ணங்கள் அவசியம்

அ) திருமுறைப் பாடல்களை ஓத முன்பும் ஓதிய பின்பும் திருச்சிற்றம்பலம் எனச் சொல்வதற்கான காரணம் யாது
ஆ) பாடசாலையில் கொண்டாடப்படும் சமய நிகழ்வுகள் மூன்று தருக
இ) பொறுமையை கடைப்பிடிப்பதால் ஏற்படும் நன்மைகள் 3 தருக
ஈ) வாழ்வியல் நற்பண்புகள் நான்கு தருக

(2+3+3+4 = 12)

03. ''சமய வாழ்வு வாழ்ந்தவர்கள் சமயக்குரவர்கள்''

அ) ''தேவார முதலிகள்'' என அழைக்கப்படுபவர்கள் யாவர்
ஆ) திருமந்திரம் எத்தனையாவது திருமுறையில் அடங்குகின்றது
இ) திருநாவுக்கரசின் அற்புதங்கள் நான்கு தருக
ஈ) திருமுறைகளை ஓதுவதனால் எமக்கு கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக

(4+2+4+2 = 12)

04. ''நாட்டார் வழிபாடு கிராமிய வாழ்க்கையில் முக்கிய இடத்தை பெறுகின்றது''

அ) ஆகமம் சாராத வழிபாடு என்றால் என்ன
ஆ) கிராமிய தெய்வங்கள் நான்கு தருக
இ) இலங்கையில் காணப்பட்ட புராதன ஈஸ்வரங்கள் எவை
ஈ) இலங்கையிலுள்ள முருகன் ஆலயங்கள் இரண்டு தருக

(2+4+4+2 = 12)

05. அ) விரதம் என்றால் என்ன
ஆ) தைப்பூச தினத்தில் மேற்கொள்ளப்படும் சுபமங்கல காரியங்கள் இரண்டு தருக
இ) விரதங்கள் நான்கு தருக
ஈ) பண்டிகைகள் கொண்டாடுவதனால் ஏற்படும் நன்மைகள் நான்கு தருக

06. அ) இலங்கையில் வாழ்ந்த சமயப் பெரியார்கள் இருவரை குறிப்பிடுக

ஆ) சேர்.பொன் இராமநாதனுக்கு பிரித்தானிய அரசினால் வழங்கப்பட்ட பட்டம் யாது? எவ்வாண்டு வழங்கப்பட்டது?

இ) சேர்.பொன் இராமநாதன் ஆற்றிய சமயப் பணிகள் எவை?

(4+4+4 = 12)

07. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக

அ) தைப்பொங்கல்

ஆ) ஆலயத் தொண்டுகள்

இ) திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார்

ஈ) கடவுள்

உ) புதுமனை புகுதல்

(6+6 = 12)